
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1300**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**71**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# தமிழர் எதிர்ப்பின் நெருப்பு!

**1963**-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொடங்கிய இந்தித் திணிப்பு அறப்போரின் தேதி, நவம்பர் 17 எனத் தேர்ந்தெடுத்தது தற்செயலானது அல்ல. “மொழி காக்கும் போராட்டம் முடிவடையவில்லை; தலைமுறை மாறினாலும் கொள்கை மாறாது” என்பதை இந்திய ஒன்றியத்துக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நினைவூட்டுவதற்காகத்தான் 1986-இலும், அந்த நாளைத் தேர்ந்தெடுத்தார் கலைஞர்.

“இந்தி எதிர்ப்பு என்பது செத்த குதிரை’ என்று, 1978-ஆம் ஆண்டு அன்றையப் பிரதமர் மொரார்ஜி சொன்னபோதும், “அது செத்த குதிரை அல்ல; தூங்கும் குதிரை’ எனப் பதிலடி அளித்திருந்தார் கலைஞர். அந்தத் தூங்கும் குதிரையைத்தான் தட்டி எழுப்பினார் கலைஞர்.

நவம்பர் 8-9-ஆம் தேதிகளில், கோவையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

இருந்தபோதிலும், போராட்டம் தணியவில்லை. தடையை மீறி போராட்டத்தை நடத்திய 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழகத்தினர் கைதுசெய்யப்பட்டனர்.

அந்த அறப்போரின் உச்சக்கட்டமாகத்தான் பேராசிரியர் க.அன்பழகன் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் செய்த குற்றம் என்ன? அரசியலமைப்பின் ஒரு பகுதியை எரித்து, எதிர்ப்புக் காட்டும் அடையாளப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதற்காகவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை சட்டமன்றத்திலிருந்து வெளியேற்றிவிட்டு, அன்றே காலியிடம் அறிவிக்கப்பட்டது.

பேரவைத் தலைவரின் தீர்ப்பினை விமர்சித்த தலைவர் கலைஞர், “பேரவைத் தலைவரின் தீர்ப்பு சர்வாதிகாரமானது. ஆனால், இந்தத் தீர்ப்புக்குப் பயந்து, சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ள திட்டமிட்ட மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஒதுங்கிக்கொள்ள மாட்டார்கள். அறிவித்த போராட்டங்கள் தொடர்ந்து நடக்கும்.

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம், உறுப்பினர்களின் பதவியைப் பறித்திருக்கலாம். ஆனால், அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய மொழி உணர்வைப் பறிக்க முடியவில்லை. தி.மு.க. உறுப்பினர்களை நீக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை, சட்டமன்றத்தில் கொண்டுவந்தவர் நாவலர் என்பதை அறிந்து, அதிகமாக வருந்தினேன்” என ‘நெஞ்சுக்கு நீதி’யில் குறிப்பிட்டிருப்பார் கலைஞர்.

முக்கியமாக, 10 சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி நீக்கப்பட்ட உடனேயே, கலைஞர் எடுத்த அரசியல் நிலைப்பாடுதான் வரலாற்றில் முக்கியமானது.

என்கிற வரலாறு உருவாகிவிடக் கூடாது என்பதில், உறுதியோடு இருந்தார் கலைஞர்.

அதனால்தான், ‘கருஞ்சாம்பல் காற்றில் பறக்கட்டும்’ என முத்தமிறிஞர் கலைஞர் தனது உடன்பிறப்புக் கடிதத்தில் எழுதினார். அது கவிதை வரியல்ல; ஒன்றிய மொழித் திணிப்புக்கு எதிராகக் கலைஞர் நிகழ்த்திய போர். சட்ட நகல் காகிதம் எரிந்தபோது.. காற்றில் பறந்தது, இந்தித் திணிப்புக்கு எதிராக திரண்ட மக்களின் கோபாவேசம்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த கருஞ்சாம்பல் விழுந்த இடமெல்லாம் போராளிகளாக மக்கள் எழுந்தனர். மாணவர்கள் அரசியலை நோக்கி வந்தார்கள். இளைஞர்கள் மொழி உரிமையை, அரசியல் வேள்வியாகக் கருதத் தொடங்கினார்கள்.

### உயர் நீதிமன்றத்தில் வழக்கு

சட்டமன்றத்தில் இருந்து கழக உறுப்பினர்களை வெளியேற்றியபோது, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது கழகம். அந்த வழக்கு, இந்திய அளவில் பேசுபொருளாகக் கவனிக்கப்பட்டுவந்தது. குறிப்பாக,






மாநாட்டுத் தீர்மானம் ஒவ்வொன்றும் போராட்டத்தின் படிநிலைகளை விளக்கின. மாவட்டம்தோறும் பொதுக்கூட்டங்கள்; மாணவர் எழுச்சிகள்; இளைஞர் அணி அணிவகுப்புகள்; பெண்களின் பங்கேற்பு; இறுதியில் அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதியை அடையாளமாக எரிக்கும் அறப்போர் அறிவிக்கப்பட்டது. “இது சட்டத்தை அவமதிக்கும் செயல் அல்ல; இந்தித் திணிப்புக்கு எதிரான அரசியல் எதிர்ப்பின் குறியீடு” என்பதைக் கலைஞர் மீண்டும் மீண்டும் விளக்கினார்.

“அரசியலமைப்பை எரிக்கவில்லை; அதில் இந்தியை ஆதிக்க மொழியாக்கும் பகுதியைத்தான் எரிக்கிறோம். எங்கள் எதிர்ப்பு இந்தியாவுக்கு அல்ல; இந்தித் திணிப்புக்கே” என்பதே கழகத்தின் நிலைப்பாடாக இருந்தது. அந்த நிலைப்பாட்டை மக்களும் புரிந்துகொண்டார்கள். அதனால்தான் போராட்டம் கட்சியின் நிகழ்ச்சியாக இல்லாமல், தமிழர் உரிமைப் போராட்டமாக விரிந்தது.

### கைது, சிறை, பதவிநீக்கம்!

நவம்பர் 17-ஆம் தேதி தொடங்கிய அறப்போரில், ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் கைதுசெய்யப்பட்டனர். மாணவர்கள்மீது தடியடி நடத்தப்பட்டது. பல மாவட்டங்களில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

“சட்டமன்ற உறுப்பினர் பதவி என்பது மக்களால் அளிக்கப்பட்ட பொறுப்பு. அந்தப் பொறுப்பை இழக்க நேர்ந்தாலும், தமிழ் மொழியின் மரியாதையை இழக்க நாம் தயாரில்லை” என்ற உறுதியைக் கொண்டிருந்தனர் கழக உடன்பிறப்புகள்.

அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த கழகத்தைச் சுற்றியே ஒட்டுமொத்த அரசியல் உலகமும் சுழன்றது. ஏனென்றால், தமிழ்நாட்டில் சட்டமன்ற இருக்கைகள் நிரந்தரமல்ல; மக்கள் மன்ற இருக்கைதான் நிரந்தரம் என்கிற அடையாளத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணாவின் வழித் தோன்றல்கள், மொழித் திணிப்பிடம் சமரசம் ஆகிவிட்டனர்

> **“1986-இல் எதிர்த்த நவோதயா பள்ளி வழி இந்தித் திணிப்பு, மும்மொழிக் கொள்கை, இன்று தேசிய கல்விக் கொள்கை என எது வந்தாலும் அதற்கு, கலைஞரின் எச்சரிக்கையே கலங்கரை விளக்கு.”**

‘இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்’ ஒரு பகுதியாக, இந்திய அரசியலமைப்பின் பகுதி XVII-இல் இந்தி மட்டுமே அலுவல் மொழியாக இருக்க வகைசெய்யும் பிரிவுகளைக் கொண்ட காகிதத் துண்டுகளை, தி.மு.க. கட்சி எரிக்கும் என்ற தங்களது செயல் திட்டத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். மனுதாரர்கள் 17-11-1986 அன்று நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றதாகக் கூறியுள்ளனர்” என்றது நீதிமன்றம்.

அவையின் சபாநாயகர், இந்த வழக்கு நடவடிக்கைகளில் ஆஜராக மறுத்துவிட்டார் என்பது கூடுதல் தகவல். இந்தப் போராட்டத்தின் போது, கலைஞர் கைதுசெய்யப்பட்டு 10 வார கடுங்காவல் தண்டனை பெற்றதுடன், சிறையில் அவருக்கு கைதி உடையை அளித்து பெருமைசெய்தது அன்றைய ஆட்சி.

கழகம் எதிர்ப்பது ஒரு மொழியை அல்ல; மொழியின் பெயரில் நடைபெறும் அதிகாரக் குவிப்பை. 1986-இல் எதிர்த்த நவோதயா பள்ளி வழி இந்தித் திணிப்பு, மும்மொழிக் கொள்கை, இன்று தேசியக் கல்விக் கொள்கை என எது வந்தாலும் அதற்கு, கலைஞரின் எச்சரிக்கையே கலங்கரை விளக்கு. அதனால்தான், 1963-இல் அண்ணா விதைத்த விதையை 1986-ல் கலைஞர் மீண்டும் முளைக்கவைத்தார். அந்த விதை இன்று வரை வாடவில்லை. மீண்டும் எழும், தமிழர் எதிர்ப்பின் நெருப்பு.

...தொடரும்

## ‘குடி அரசு’ இதழ் முழுத்தொகுப்பு வெளியீடு!




**த**ந்தை பெரியார் அவர்களால், 1925-ஆம் ஆண்டு முதல் 1949-ஆம் ஆண்டு வரை வார இதழாக வெளியிடப்பட்ட ‘குடி அரசு’ இதழ் தொகுப்பு, 43 தொகுதிகளாக தந்தை பெரியார் திராவிடர் கழகத்தால் வெளியிடப்படுகிறது.

வரும் அக்டோபர் 3-ஆம் தேதி, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் நம் கழகத் தலைவர் அவர்கள் வெளியிட உள்ளார். இந்தத் தொகுப்பு தொடர்பாக த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன் விளக்கம் வெளியிட்டுள்ளார்.

“தந்தை பெரியாரின் சிந்தனைகள் தொடர்பாக, இதுவரை வெளியாகியுள்ள அனைத்து நூல்களும் (‘குடி அரசு’ - தந்தை பெரியாரின் எழுத்துகளும் சொற்பொழிவுகளும் உட்பட) அவருடைய எழுத்துகளும் உரைகளும் மட்டுமே அடங்கியவை. ஆனால், தந்தை பெரியார் திராவிடர் கழகம் இப்போது வெளியிடும் இந்நூல் தொகுப்பு என்பது, ‘குடி அரசு’ இதழில் வெளியான தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பல்ல.

மாறாக, 1925-ஆம் ஆண்டு வெளியான முதல் ‘குடி அரசு’ இதழின் அட்டையிலிருந்து 1949-ஆம் ஆண்டு வெளியான இறுதி ‘குடி அரசு’ இதழின் அட்டை வரை உள்ள அனைத்துப் பக்கங்களும் அப்படியே உள்ளது உள்ளபடி, ‘குடி அரசு’ வெளியான அதே அளவில் (Tabloid), அதே வடிவில் வெளியிடுகிறோம்.

‘சுயமரியாதை இயக்கச் செயல்பாடுகள்’, ‘பார்ப்பனரல்லாதார் மாநாடுகள்- அதில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள்’, ‘தாழ்த்தப்பட்ட மக்களின் இயக்கச் செயல்பாடுகள்- அதன் தலைவர்களின் அறிக்கைகள்’, ‘உரைகள்’, ‘செய்திகள்’, ‘சனாதன பார்ப்பனர் மாநாடுகள் - வருணாசிரமத்தை வலியுறுத்திய அதன் தீர்மானங்கள்’, ‘காங்கிரஸ் கட்சி மற்றும் சுயராஜ்யக் கட்சியின் பேரால் பார்ப்பனர்கள் நடத்திய பித்தலாட்டங்கள்’ போன்ற அன்றைய காலகட்டத்தின் செய்திகள் அனைத்தும் அடங்கியதுதான் ‘குடி அரசு’ இதழின் முழு வடிவம்; முழுப்பரிமாணம். சுருங்கக்கூறின், இவ்வெளியீடு ‘குடி அரசு’ இதழின் ‘மறுபிறப்பு’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



சி.எஸ்.ஆர்.சந்தோஷ்



### தலைவருடன், தந்தையுடன்...

25.12.2003 எனது பிறந்தநாள் அன்று, நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும், மரியாதைக்குரிய அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களிடம், வாழ்த்துப் பெற, மறைந்த என் தந்தை மாவட்டப் பிரதிநிதி சி.எஸ்.ராஜா பூசணம் அவர்கள் அழைத்துச் சென்றார். அப்போது நான், ஆயிரம்விளக்கு 110-வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தேன். தலைவர் அவர்கள், மகிழ்ச்சியுடன் என்னை வாழ்த்தி, ‘என்ன பொறுப்பில் இருக்கின்றாய்?’ என்று கேட்டு உரையாடியது, வாழ்வில் மறக்க முடியாத தருணம்.

**- சி.எஸ்.ஆர்.சந்தோஷ், அயலக அணி மாவட்டத் துணை அமைப்பாளர், சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நாம் ஆற்றவேண்டிய பணிகள்!

1955-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் தேதி, கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டின்போது, “காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி” என்று கடிதம் எழுதினார், பேரறிஞர் அண்ணா. அதில், “உள்ளத்திலே ஓராயிரம் ஈட்டிகள் குத்துவது போல, மாற்றார் நடந்துகொண்டதைச் சகித்துக்கொண்டும், தாங்கிக்கொண்டும், கழகத்தை அமைத்து, இந்தக் கவர்ச்சிகரமான கட்டத்திற்கு வந்திருக்கிறோம். கழகம் பணியாற்றவேண்டிய துறைகள் பல உள. இப்போது உள்ள கட்டம், நமது நாட்டை முழுவதும் நாம் பார்த்துப் பாடம் பெறும் கட்டம். அந்தக் கட்டத்தில், நாம் ஆற்றவேண்டிய பணிகள் பற்றி, உன் சீரிய யோசனையைத் தர வேண்டுகிறேன்” என்று குறிப்பிட்டிருப்பார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900